பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 24 (9—11—68) சனி ★ வெளியூர்: ஐப்பசி 25 (10—11—68) ஞாயிறு [இதழ்: 120

நான்காம் திட்டத்தில் உணவு உற்பத்தி

புதுடில்லி, நவ. 8—

இந்தியாவின் உணவு உற்பத்தி நான்காவது திட்டத்தின் முடிவில் 1340 முதல் 1380 இலட்சம் டன்கள் வரையில் இருக்கவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இலக்கு நிறைவேற வேண்டுமானால், நான்காவது திட்டக் காலத்தில் தானியங்களின் உற்பத்தி 31·5 சதவிகிதம் பெருகவேண்டும்.

மேலும் புது வரிகள் விதிக்கப்படுமா?

திட்டக் குழு யோசனை — மொரார்ஜியின் அச்சம்!

'முதல்வர்களைக் கலந்துதான் முடிவு செய்யப்படும்' என்கிறார்

புதுடில்லி, நவ. 9—

திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, மக்கள் மீதுள்ள வரிச் சுமையை மேலும் அதிகப்படுத்தத் திட்டக் குழு முனைந்துள்ளது.

இங்கு கூடிய திட்டக் குழுவின் கூட்டத்தில், புது வரி விதிப்புக் குறித்து மத்திய அமைச்சரவையுடனும், மாநில முதலமைச்சர்களுடனும் கலந்துபேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறையின் முதலீடு ரூ. 15,757 கோடியாக இருக்க வேண்டும் என்று திட்டக் குழு யோசனை கூறியுள்ளது; இந்தப் பணத்தைத் திரட்டுவதற்கான வழிவகைகளில் ஒன்றுதான் வரி விதிப்பு யோசனை.

"மத்திய அமைச்சரவையும், மாநில முதலமைச்சர்களும் ஒப்புக்கொண்டால்தான் புதிய வரிகள் விதிக்க முடியும்" என்று திட்டக் குழு கருதுகிறது.

இன்றையக் கூட்டத்தில் கலந்துகொண்ட துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், 'புதிய வரிகள் விதிக்கப்படுமானால் மக்களிடமிருந்து எதிர்ப்பு ஏற்படும்' என்பதைச் சுட்டிக்காட்டினார்; 'மாநிலங்களின் ஒப்புதலின்றிப் புதிய வரி விதிக்க நான் தயாராக இல்லை' என்று தெரிவித்துவிட்டார்.

திட்டப் பிணைப்பில்லாத செலவுகளுக்கு மாநிலங்கள் ரூ. 680 கோடி கோரியிருக்க, நிதிக் குழு, ரூ. 36 கோடி மட்டுமே இதற்கென்று ஒதுக்கியுள்ளது.

மாநிலங்கள் அதிகப்படி வரி விதிப்பதென்ற பிரச்சினையை, நிதிக் குழுவின் சிபாரிசு பெரிதும் பாதித்திருக்கிறது.

எல்லா மாநிலங்களின் வரவு — செலவுத் திட்டங்களிலும் மொத்தப் பற்றுக்குறை பெருந்தொகையாக இருக்குமென்பதைக் கருதி முதலமைச்சர்கள் கூட்டம் விரைவில் கூட்டப்படும்; திட்டத்துக்கான நிதி வசதிகள் திரட்டுவதைக் குறித்து அப்போது ஆலோசனை நடக்கும்; இதுவரையில் அதிகப்படி வரி விதிப்புக்களை முதலமைச்சர்கள் எதிர்த்து வந்துள்ளனர்.

கணிசமான அளவுக்கு அதிகப்படி வரி விதிப்பதற்கு முதலமைச்சர்களும், மத்திய அமைச்சரவையும் ஒப்புக்கொண்டால்தான், திட்டக் குழு எதிர்நோக்குப் பிரிவு குறிப்பிட்டதுபோல் திட்ட முதலீடு ரூ. 15,757 கோடியாக இருக்க முடியும்.

அதற்கு மாறாக, நிதி வசதி வாய்ப்புப் பரிசீலனைக் குழு, திட்ட அளவு ரூ. 12,835 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றுக்குறை நிதியீட்டு முறைக்காக ரூ. 1,000 கோடியை இதில் சேர்த்த பிறகுகூட அதே அளவையே மதிப்பிடுகிறது.

பற்றுக்குறை நிதியீட்டு முறையைப் பல தடவைகளில் மொரார்ஜி எதிர்த்து வந்திருக்கிறார். இந்நிலையில் கணிசமான அளவில பற்றுக்குறை நிதியீட்டு முறையை மேற்கொள்வதற்கும் அமைச்சரவையின் திட்டவட்டமான ஒப்புதல் அவசியமாகிறது.

நிதி வசதிகள் பற்றிய சிக்கலான பிரச்சினைக்கு மத்திய அமைச்சரவையும், முதல்வர்களும் முடிவாகத் தீர்வு கண்ட பிறகுதான் திட்டத்தின் நிலை தெளிவாகும் என்று தெரிகிறது.

ஆண்டொன்றுக்கு ரூ. 200 கோடி விதம் அதிகப்படி வரி விதிப்பதாயின், இப்போதைய வரி விதிப்பு அடிப்படையில் திட்டத்துக்கு ரூ. 15,000 கோடி நிதி வசதி கிடைக்குமென்று அனுகல் குறிப்பு மதிப்பிடுகிறது.

அதிகப்படி வரி ஆண்டுக்கு ரூ. 100 கோடி இருக்கலாம் என்று நிதி வசதி வாய்ப்புக் குழு கூறுகிறது.

அதற்கு இடமில்லை!

கொச்சி, நவ. 9—

"கிழக்கு ஜெர்மனிக்குப் பயணம் செல்லும திட்டத்தை, மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளபடி கைவிடுவதற்கான பேச்சுக்கே இடமில்லை" என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு தெரிவித்தார்.

★

திட்டத்தின் அளவு மேலும் சுருங்குமா?

முதலமைச்சர்களுடன் கலந்து பேசத் திட்டம்

புதுடில்லி, நவ. 9—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறித்து, மீண்டும் மாநில முதலமைச்சர்களுடனும், தேசிய வளர்ச்சிக் குழுவின் நிலைக் குழுவுடனும் கலந்தாலோசிக்கப்படும்; மத்திய அமைச்சரவையுடனும் கலந்தாலோசிக்கப்படும்"

என்று திட்டக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் டி. ஆர். காட்கில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திட்டக் குழுவின் கூட்டம் இன்று இங்கு நடைபெற்றபோது, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், மற்றும் திட்டக் குழுவின் எல்லா உறுப்பினர்களும் இருந்தனர்.

"இன்னும் பதினைந்து நாட்களில் திட்டம் பற்றிய தெளிவான தோற்றம் தெரியும்" என்று காட்கில் கூறினார்.

"அந்நிய உதவி எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பது இன்னும் தெரியவில்லை" என்றார் அவர்.

"1969 சனவரி இறுதியில்தான் திட்டம் முழு வடிவம் பெறும்" என்றார்.

காந்தி வளர்த்த காங்கிரசு எங்கே?

கொள்கையை விட்டவர்களும் குடிப்பவர்களும் காங்கிரசாரா?

மனம் குமுறிக் கேட்கிறார் மணி பென் பட்டேல்

அகமதாபாத், நவ. 9—

"காந்தியாரும், சர்தார் வல்லபாய் பட்டேலும் உயிர் வாழ்ந்த காலத்தில், தியாகம், உயர்ந்த நிலையை எட்டியிருந்தது; ஆனால் அது இன்று தாழ்ந்துகொண்டே போகிறது!

"முன்பெல்லாம் காங்கிரசுத் தலைவர்கள், பிறருக்குக் கூறுவதுபோல் தாங்களே நடந்துகாட்டி வந்தனர்; ஆனால் இன்றோ......?"

இவ்வாறு சர்தார் பட்டேலின் மகள் மணி பென் பட்டேல், மனம் குமுறிச் சுட்டிக்காட்டிக் கேட்டிருக்கிறார்; இதற்கு எடுத்துக்காட்டாக அவர் குறிப்பிட்டதாவது:—

"நம்முடைய நாட்டில் இன்று சில அமைச்சர்களும் காங்கிரசுக்காரர்களும் பகிரங்கமாக மது அருந்துவதைக் காணும்போது மனவேதனையாக இருக்கிறது.

"'மதுவிலக்கைச் சரியானபடி செயலுக்குக் கொண்டுவர இயலவில்லையென்றால் அதற்காக ஏன் அரசியல் சட்டத்தையே திருத்தக்கூடாது?' என்று சில காங்கிரசுப் பெருந்தலைவர்களிடமும் வினவியிருக்கிறேன்."

தமிழகத்துக்கு டில்லி அரசு கைவிரிப்பு

தருவதாகச் சொன்ன உதவித் தொகை மறுப்பு

மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கும் பொறுப்பு தட்டிக்கழிப்பு

சென்னை, நவ. 8—

"தமிழ்நாட்டில் மூடப்பட்டும் அல்லது வேலை நடப்பது மட்டுப்படுத்தப்பட்டும் இருப்பதாகச் சொல்லப்படும் 44 நெசவு ஆலைகளை மீண்டும் செயல்படுமாறு செய்ய மாநில அரசுக்கு ரூ. 3 கோடி கொடுத்துதவ வேண்டும்" என்ற தமிழக அரசின் கோரிக்கைக்கு டில்லி கைவிரித்துவிட்டது.

முடங்கியுள்ள அல்லது மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யும் திட்டத்துக்கு உதவி அளிக்கப்படுமென மத்திய அரசு முதலில் உறுதியளித்திருந்ததாகத் தமிழக அரசு அறிவித்தது.

"சம்பந்தப்பட்ட ஆலைகளின் பொருளாதார நிலவரம் தெரியாதிருப்பதாலும், அவை மீண்டும் இலாபகரமாகச் செயல்படுத்தப்படுமென்று உத்தரவாதம் இல்லாதிருப்பதாலும் தமிழ்நாட்டிலுள்ள நெசவாலைகளுக்கு மட்டும் உதவி தருவது இயலாது" என்று மத்திய அரசு கருதுகிறதாம.

"தமிழகத்தில் நெசவு ஆலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க வேண்டியது இந்திய நெசவாலை கார்ப்பரேஷன் பொறுப்பாகும்" என்று மத்திய அரசு கூறுகிறது.

இந்த ஆண்டு சனவரியிலிருந்து மொத்தம் 66 ஆலைகள் மூடப்பட்டுள்ளன; இவற்றுள் 44 தமிழகத்தில் இருக்கின்றன; இதனால் சுமார் 54,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர்.

இதைத் தவிர குசராத்தில் 9 ஆலைகளும், மகாராட்டிரத்தில் 7 ஆலைகளும், கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் முறையே 3 ஆலைகளும் மூடப்பட்டுள்ளன.

டில்லியின் போக்குக்குக் கண்டனம்

பி. சோ. கட்சி மாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, நவ. 8—

தமிழகத்தில் மூடப்பட்டிருக்கும் ஆலைகளைத் திறக்க மத்திய அரசு எந்த வழியும் செய்யாமல் இருப்பதற்காக பி. சோ. கட்சி, மத்திய அரசின்மீது குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இங்கு கடந்த 3 நாட்களாக நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில், 'கோவையிலும், தென்னகத்தின் மற்றப் பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பஞ்சாலை நெருக்கடியைத் தீர்க்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"மூடப்பட்டுள்ள ஆலைகளை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டும்; அல்லது கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் நடத்த வழி செய்ய வேண்டும்"

என்றும் இக்கட்சி தனது தீர்மானத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"மத்திய அரசு வெறும் வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவிட்டு நடவடிக்கை எடுக்காமலிருக்கிறது"

என்று தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானின் அடாவடிச் செயல்

போரில் கைப்பற்றிய இந்திய உடைமைகள் ஏலம்

இந்திய அரசின் எதிர்ப்புக் குறிப்பு

புதுடில்லி, நவ. 9—

இந்தியா -- பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தான் கைப்பற்றிய இந்தியச் சொத்துக்களையும், பொருட்களையும் ஏலம் போடுவதை நிறுத்த உடனே நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானை, இந்தியா வற்புறுத்தியிருக்கிறது.

அனைத்து நாட்டுச் சட்டம், நடைமுறை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சட்டவிரோதமாகக் கைப்பற்றப்பட்ட பொருட்களை விற்க முற்படும் அடாவடிச் செயலை இந்திய அரசு கண்டித்துள்ளது.

ஏலம் அல்லது வேறு முறையால் இவ்வாறு சட்டவிரோதமாக விற்கப்படுவதால், பாகிஸ்தான் அல்லது மூன்றுவது தரப்பு கொண்டாடும் உரிமையை இந்திய அரசு ஏற்காது என்று வெளிவிவகார இலாகா கூறியது.

பாகிஸ்தான் உதவித் தூதரிடம் வெளிவிவகார அதிகாரி டாக்டர் சிங் எதிர்ப்புக் குறிப்பைக் கொடுத்தார்.

"இந்தப் பொருட்களை விற்பனை செய்வதைப் பாகிஸ்தான் தவிர்க்கும் என இந்தியா நம்புகிறது; இல்லாவிடில், இரு நாடுகள் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் அது இடையூருக இருக்கக் கூடும்"

என்று பாகிஸ்தான் உதவித் தூதரிடம் டாக்டர் சிங் கூறினர்.

பத்திரிகை வதந்திகள் அடிப்படையில் ஆட்சேபனை இல்லை என்றும், ஆனல் கிழக்குப் பாகிஸ்தான் எதிரி சொத்து போர்டின் அறிவிப்பு அடிப்படையில் ஆட்சேபிக்கப்படுவதாகவும் சிங் கூறினர்; 'அத்தகைய நடவடிக்கை தாஷ்கண்ட் பிரகடனத்துக்கு முரண்பட்டது' என்ருர்.

இந்திய அரசின் குறிப்பு கூறுவதாவது:—

"போரின்போதும், பிறகும், பாகிஸ்தான் அரசால் கைப்பற்றப்பட்ட பஞ்சாலைகள், தேயிலைத் தோட்டங்கள், திரைப்படக் கொட்டகைகள், தொழில் நிறுவனங்கள் போன்ற பல மதிப்புமிக்க இந்திய உடமைகளை விரைவில் ஏலம் மூலம் விற்கக் கிழக்குப் பாகிஸ்தான் எதிரி சொத்து போர்டு உத்தேசிப்பதாக பாகிஸ்தான் பத்திரிகைகளில் வெளியான செய்திகளிலிருந்து இப்பொழுது தெரிய வருகிறது.

முதலில் சட்டவிரோதமாகச் சொத்துக்களைக் கைப்பற்றி பிறகு அனைத்து நாட்டுச் சட்டம், நடைமுறையைப் பொருட்படுத்தாமல் விற்கும் பாகிஸ்தான் அரசின் அடாவடிச் செயலை இந்திய வெளி விவகாரத் துறை ஆட்சேபிக்கிறது.

போரின்போது இந்தியக் குடிமக்களின் சொத்துக்களையும், பொருள்களையும் பாகிஸ்தான் கைப்பற்றலாம் என வைத்துக் கொண்டாலும் (ஆனல் ஒப்புக் கொள்ளவில்லை) அனைத்துநாட்டுச் சட்டம், நடைமுறையின்படி சொத்துரிமைக்குப் பாதகம் இல்லாமல் அந்தச் சொத்துக்களைப் பராமரிப்பில் வைத்திருக்க வேண்டும். பாகிஸ்தான் பாதுகாப்பு விதிகளின்படி சமாதானம் ஏற்பட்டதும் செய்யப்படும் ஏற்பாடுகளை உத்தேசித்து சொத்துக்கள் காக்கப்பட வேண்டும்.

போர்ச் செயல்கள் நின்று சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பது பற்றி விவாதிக்க தாஷ்கண்ட் பிரகடனத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதால், அச்சொத்துக்கள் பாகிஸ்தானுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில் விற்பது அல்லது ஏலம் விடுவது சட்ட விரோதமானது.

சொத்துக்கள் அழுகும் பொருட்களல்ல; அழுகும் பொருட்களைத்தான் விற்க யோசிக்கலாம்; அதுவும் அற்ப விலையில் சொத்து விற்கப்படாதிருக்க இரு அரசுகளிடையே உடன்பாட்டுடன் அதைச் செய்ய வேண்டும்.

இதுபற்றி நல்லுறவு நிலையை ஏற்படுத்தவும், தாஷ்கண்ட் பிரகடனத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதை நிறைவேற்றவும், போரில் இருதரப்பும் மேற்கொண்ட சொத்துக்களைத் திருப்பியளிப்பது பற்றி விவாதிக்க உடனே நடவடிக்கை எடுக்குமாறும் பாகிஸ்தான் அரசை மீண்டும் கேட்டுக்கொள்கிறது."

இந்தியா --- இலங்கைப் பிரச்சினைகள்

இரு தலைமையமைச்சர்களும் சந்தித்துப் பேசுவர்

புதுடில்லி, நவ. 9—

இலங்கைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகா, இம்மாதம் பிற்பகுதியில் டில்லிக்கு வருகையில், இரு நாட்டுப் பிரதிநிதிகளிடையே ஆலோசனைகள் நடைபெறும்.

நவம்பர் 27-ல் அவர், இந்தியாவுக்கு வருகை தருகிருர்.

தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும்—இலங்கைத் தலைமையமைச்சர் டட்லிக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறும்; இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இரு நாட்டு அரசுகளின் அதிகாரிகளும் அனைத்து நாட்டுப் பிரச்சினைகளைக் குறித்தும், இரு நாடுகளுக்கும் பொதுவாகவுள்ள பிரச்சினைகளைக் குறித்தும் பேச்சு நடத்துவர்.

அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன் உட்பட வேறு பல நாடுகளுடன் இத்தகைய ஏற்பாடு ஒன்றை இந்தியா செய்துகொண்டிருப்பது நினைவுகூரத்தக்கது.

கச்சத் தீவு பிரச்சினையும் இப்பேச்சுவார்த்தைகளில் இடம் பெறும்.

திறமைக்கு கிடைக்கும்மதிப்பு

"திறமையாளர்களுக்கு இந்திய அரசு மதிப்பு அளிப்பதில்லை; எடுத்துக்காட்டாக, கோவை ஜி. டி. நாயுடு அவர்களைக் குறிப்பிட் முடியும்.

"இவர், மலிவு விலையில் வீடுகள் கட்டுவதற்காக ஒரு திட்டம் தந்தார்; அதன்படி ஒரு வீட்டைக் கட்டுவதற்கு ஆகும் செலவு ரூ. 1,000 முதல் ரு. 3,500-க்குள் அடங்கிவிடும்; கட்டுவதற்காக ஆகும் காலமும் மிகக் குறைவு; சில மணிகளில் இந்த வீடுகளைக் கட்டிவிட முடியும். இந்த வீடுகளுக்கான பிளான்களும் விஞ்ஞான முறையில் தீட்டப்பட்டிருந்தன.

"இவ்வளவு இருந்தும், அதிகாரிகள் இவருடைய திட்டத்திடம் காட்டியுள்ள போக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

"இந்தத் திட்டத்தை ஆராயும் பொறுப்பை இந்திய அரசு, சில அதிகாரிகளிடம் ஒப்படைத்தது; அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குறைகளைச் சுட்டிக் காட்டிவிட்டு, இந்த அதிகாரிகள், திட்டம் முழுவதையுமே 'பயனற்றது' என்று தள்ளிவிட்டிருக்கிருர்கள்"

என்று எம். ஆர். பாய் என்பவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியிருக்கிருர்.

ஐதராபாத் மாணவர் முன்மாதிரி!

டிக்கெட் இல்லாமல் இரயில் பிரயாணம் செய்யும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், ஐதராபாத் நகர மாணவர்கள் இயக்கம் நடத்திவருகிருர்கள்.

"டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யாதீர்" என்று பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டுள்ள அட்டைகளைத் தாங்கிக் கொண்டு இவர்கள் இரயில் நிலையங்களைச் சுற்றி வருகிருர்களாம்!

விரைவிலேயே நீதி கிடைக்கும்?

வழக்குகளைத் துரிதமாக முடிவு செய்யத் திட்டம்

புதுடில்லி, நவ. 9—

பல்வேறு மாநிலங்களில், பல வழக்குகள்மீது முடிவு செய்யப்படாமலிருப்பது பற்றி, இங்கு நடைபெற்ற தலைமை நீதிபதிகளின் மாநாடு கவலை தெரிவித்தது.

"சாமானிய மனிதனுக்கு விரைவில் நீதி கிடைப்பதற்குத் தரத்தை விட்டுத் தராமல், துரிதமாக வழக்குகளை முடிவு செய்வது எப்படி" என்பதை, மாநாடு பரிசீலனை செய்தது.

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு விரைவிலேயே கூடுதலாக நீதிபதிகள் நியமிக்கப்படக்கூடுமாம்.

கோடைக்கானல் மக்களுக்குப் புதிய வசதி

கழகச் சட்டமன்ற உறுப்பினரின் முயற்சி

சென்னை, நவ. 9—

இனிக் கோடைக்கானல் வட்டத்திற்குரிய நில ஒப்படைப்பு அலுவலகம் கோடைக்கானல் நகரத்திலேயே இயங்கும். இதனல், கோடைக்கானல் மக்கள், நிலப் பட்டாக்களைப் பெற முன்னைப் போல் ஆண்டுக்கணக்கில் காத்திருக்க வேண்டியதில்லை; இனி மேல் விரைவாகப் பெறலாம்; வேறு ஊர்களுக்குப் போகவேண்டிய அவசியமுமில்லை.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான தோழர் மேத்தா அவர்களது பெரும் முயற்சியின் பேரில் இதற்கான உத்தரவு சென்னையில் கையெழுத்தாகிவிட்டது.

முன்னர் மதுரை மாவட்டத்தில் மதுரை மற்றும் பெரியகுளத்தில் மட்டுமே நில ஒப்படைப்பு அலுவலகங்கள் இருந்தன.

கோடைக்கானல் மக்கள் நிலப் பட்டாவோ, வீட்டுப் பட்டாவோ பெற வேண்டியிருந்தால் அதற்காக வெளியூர் போக நேர்ந்தது; பட்டா பெறுவதற்கும் ஆண்டுக் கணக்கில் காலமாகி வந்தது.

புதிய உத்தரவுப்படி விரைவில் கோடைக்கானலில் திறக்கப்படும் அலுவலகத்தில் கோடைக்கானல் வட்ட சம்பந்தப்பட்ட பட்டா விவகாரங்கள் அனைத்தும் முடிந்துவிடும்.

வீதிகளில் திரியும் மாடுகளால் தொல்லை

காவல் துறையினர் இனி நடவடிக்கை எடுப்பர்

சென்னை, நவ. 9—

"வீதிகளில் கண்டபடி திரியும் கால்நடைகள் சம்பந்தமாகப் போலீசுத்துறை, தனது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தும்" என்று போலீசுக் கமிஷனர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திருவல்லிக்கேணி போன்ற பகுதிகளில் மாடுகளின் தொல்லை அண்மையில் மிக அதிகமாகிவிட்டது.

"வீதிகளில் திரியும் கால்நடைகளை 'பவுண்டி'ல் அடைக்க உத்தரவு பிறப்பிக்கப்படும்" என்று அவர் சொன்ஞர்.

வீதிகளில் காற்ருடிகளைப் பறக்கவிட்டால்.....

போலீசு கமிஷனர் எச்சரிக்கை

"சென்னை நகர வீதிகளில் காற்ருடி விடுவது, சென்னை நகரப் போலீசுச் சட்டத்தின்கீழ் குற்றமாகும்"

என்று, போலீசுக் கமிஷனர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"வீதிகளில் காற்ருடிகளைப் பறக்க விடுவதால், மக்களுக்குத் தொல்லைகள் அதிகரித்துவருகின்றன; காற்ருடி விடுவதற்குப் பயன்படுத்தப்படும் நூல், மக்களுச்குக் காயத்தை ஏற்படுத்தி விடுகிறது.

"மின்சாரக் கம்பி, டெலிபோன் கம்பி ஆகியவற்றில் காற்ருடியின் நூல் சிக்கி, கம்பிகள் பழுதாகும் நிலையும் ஏற்பட்டுவிடுகிறது.

"எனவே, நகர வீதிகளில் காற்ருடிகளைப் பறக்கவிடுபவர்கள் மீது இனி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படும்."

உலகப் பல்கலைக் கழகக் கிளை

சென்னையில் கட்டிடம்

சென்னை, நவ. 9—

உலகப் பல்கலைக் கழக அமைப்பின் சென்னைக் கிளைக்கான புதிய கட்டிடம் கட்டுவதற்கு டேனிஷ் அரசு ரூ. 16 இலட்சம் அளித்திருக்கிறது; இந்நிதியை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏற்றுக்கொண்டார்.

சென்னை ஸ்பர்டாங் ரோடில்--- பல்கலைக் கழகப் பெவிலியனுக்கு அருகில் இதற்காக ஒரு மனையைத் தமிழக அரசு வாங்கியிருக்கிறது. இந்த இடத்தில் அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடம் எழுப்பப்படும்.

விளையாட்டுக்கூடம், சிற்றுண்டி விடுதி, கூட்டுறவுப் பண்டகசாலை, நூல் நிலையம், கலை அரங்கு ஆகியவை இந்தக்கட்டிடத்தில் அமைக்கப்படும்.

மாணவர்கள் உடலைப் பரிசோதிக்கவும் இதில் வசதி செய்யப்படும்.

பஞ்சத்தின் நிழலில் 26,000 கிராமங்கள்

இராஜஸ்தானிலுள்ள 32,000 கிராமங்களில் 26,000 கிராமங்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பல கிராமங்களில் கடந்த 8 ஆண்டுகளாக வறட்சி நிலை நீடித்துவருகிறது. புல்லும், தண்ணீரும் இல்லாமல் பஞ்சப் பகுதிகளிலுள்ள 20-இலடசத்திற்கு மேற்பட்ட பசுக்கள் மாயும் நிலையில் உள்ளன.

பம்பாயிலுள்ள தாஜ்மகால் ஓட்டலில், நகர மார்வாடிகள் சங்கத்தினரால் தரப்பட்ட விருந்து ஒன்றில் பேசிய முதலமைச்சர் மோகன்லால் சுகாடியா, இராஜஸ்தானில் பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உதவிபுரிய முன்வருமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

விண்வெளியில் ரஷ்யாவின் பயங்கரக் குண்டு

அமெரிக்க விமானத் தளங்கள்மீது பாய்ந்து தாக்கக்கூடியதாம்

ஒட்டாவா, நவ. 9—

விண்வெளியில் இரஷ்யாவின் புதிய வானவெளிக் குண்டு ஒன்று வட்டமிடுவதை, கனடா விமானப் படையினர் புகைப்படம் பிடித்துள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த வானவெளிக் குண்டு விண்வெளியில் சுற்றி வருகிறதாம்; இது அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை; எனினும், பூமியிலிருந்து 50,000 மைல் தூரத்தில் வானத்தில் பறக்கும் எந்தப் பொருளையும் படம் பிடிக்கத்தக்க திறனுள்ள 3 டன் காமிரா ஒன்று விமானப் பாதுகாப்புத் தளத்தில் உள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த இராபர்ட் மக்நமாரா, நிருபர்களிடம் இதுபற்றிக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"1968-ம் ஆண்டில் அமெரிக்க விமானப் படைத் தளங்களின் மீது பாய்ந்து தாக்கக்கூடிய சக்திமிக்க வானவெளிக் குண்டுகளை இரஷ்யா உருவாக்கி வருகிறது" என்றே அவர் கூறினர். அத்தகைய குண்டு ஒன்றையே கனடா விமானப் படையினர் படம் பிடித்திருப்பதாக இப்போது தகவல் கிடைத்துள்ளது.

உலகப் போர் மூளும் சூழ்நிலை

மேற்கு வல்லரசுகள் போக்கின் விளைவாம்

மாஸ்கோ, நவ. 9—

"உலகப் போர் மூளக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலையை, மேற்கு வல்லரசுகள் உருவாக்கி வருகின்றன"

என்று, இரஷ்யப் புரட்சியின் 51-வது ஆண்டுவிழாவினையொட்டி மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பின் போது பேசுகையில், இரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் கிரெச்கோ குற்றஞ்சாட்டினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இன்றைய அனைத்துலகச் சூழ்நிலையில் இரஷ்யாவின் பாதுகாப்புகளை வலுப்படுத்தவும், இராணுவப் பலத்தை அதிகரிக்கவும் இரஷ்யா, எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

"ஏகாதிபத்தியவாதிகள், நெருக்கடிகளை உருவாக்கி உலகில் போர் அபாயத்தைத் தூண்டுவதுடன் மட்டுமன்றி, சோஷலிச நாடுகளையும் புறக்கணிக்கின்றனர்; சமாதானம், சோஷலிசம் ஆகியவற்றின் எதிரிகளான அவர்களின் விபரீதச் செயல்களை இரஷ்யா தீவிரமாகக் கண்காணித்து வருகிறது."

ரூ. 11,82,000 மோசடி

கூட்டுறவு பாங்கி ஊழியர்கள் மூன்று பேர் கைது

காரைக்கால், நவ. 9—

காரைக்கால் கூட்டுறவு அர்பன் பாங்கியில் ரூ. 11,82,000 மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படுவது சம்பந்தமாக போலீசார் மூன்று பேரைக் கைது செய்திருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் அந்த பாங்கியின் ஊழியர்களாவர். அம்மூவரையும் காவலில் வைக்கும்படி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மின்சார வாரியத்தின் புதிய கடன் திட்டம்

விருப்ப அடிப்படையில் திரட்டப்படும்

வேளாண்மை, கைத்தொழில்கள், தெரு விளக்குகள் ஆகிய வைகளுக்குப் புதிதாக மின்சார இணைப்புகள் பெற விரும்புவோரிடமிருந்து விருப்ப அடிப்படையில் கடன் பெறும் தமிழக மின்சார வாரியத் திட்டத்துக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

'சப்ளை லைன்'கள் போடவும், முன்னுரிமை அடிப்படையில் இணைப்பு வழங்கவும் இந்தக் கடன் பணம் பயன்படும்.

இத்திட்டத்தின்படி வேளாண்மைக்கு இணைப்புப் பெற விரும்புவோர் ரூ 2,000-க்கு மேற்படாமல் ஒரு குதிரைச் சக்தி விசைக்கு ரூ. 500 வீதம் தந்தால் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை தரப்படும்.

கைத்தொழில்களுக்கு 'லோ-டென்ஷன்' சர்வீசு பெற விரும்புவோர், இணைப்புப் பெறும் ஒவ்வொரு குதிரைச் சச்திக்கும் ரூ. 750 வீதமும், 'ஹை-டென்ஷன்' சர்வீசு பெற விரும்புவோர் ஒரு கிலோவாட்டுக்கு ரூ. 1,000 அல்லது ஆகும் முதலீட்டுச் செலவு இரண்டில் எது குறைவோ அதைக் கொடுக்க வேண்டும்.

தெரு விளக்குகளுக்கு -- ஒரு விளக்குக்கு ரூ. 100 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

முதலீட்டுச் செலவுக்கான முழுக் கடன் தொகையையும் கொடுப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

முழுவதுக்குமான கடன்தொகை வராவிட்டால், பாக்கியுள்ளதை வாரியம் போட்டுக் கொள்ளும்.

இந்தக் கடனுக்கு ஆண்டுக்கு நாலரை சதவிகித வட்டி தரப்படும். இந்த வட்டிப் பணம், ஆண்டு மின்சார பயன்பாட்டுக் கணக்கில் உளவடைத்துக் கொள்ளப்படும்.

கே.வி.கே. சாமி பெயரால் மண்டபம்

தூத்துக்குடியில் திறந்துவைக்கப்பட்டது

தூத்துக்குடி, நவ. 9—

மறைந்த மாவீரர்--கழகச் செயல் வீரர் கே. வி. கே. சாமியின் நினைவாக, தூத்துக்குடி நூற்பாலைத் தொழிலாளர் சங்கம் எதிரில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டு அதன் திறப்பு விழா, நவ. 3-ல் நடைபெற்றது.

விழாவிற்கு நகராட்சித் தலைவர் பி. பொன்சாமுவேல் தலைமைதாங்கினர்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இரத்தினவேல் பாண்டியன் மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது கூறியதாவது:—

"பேரறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பி கே. வி. கே. சாமி, பொது வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; அவருடைய நினைவு மண்டபத்தைத் திறந்துவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கே. வி. கே. சாமியின் தொழிற் சங்கப் பணி இங்குள்ள தொழிலாளர்களுக்குத் தெரியும். நான் தொழிற் சங்கத்தில் வேலை செய்யவேண்டும் என்று எனக்குப் பணியாற்ற வாய்ப்புத் தந்தவரே சாமிதான்.

எத்தனை இடையூறுகள் வந்தாலும் கே. வி. கே. சாமி கவலைப்படாதவர்; பொது மக்களுக்கும் -- தொழிலாளர்களுக்கும் தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி உழைத்தார்; கடைசியில் இந்த மண்ணில்தான் மாண்டார்; ஆகவே நாமும், அவர் விட்டுச் சென்ற பணியை மேற்கொண்டு அவர் புகழ் வாழ பாடுபட வேண்டும்."

பின், வழக்கறிஞர்கள் இராசேந்திரன், ஐ. டி. சந்திரபால், அந்தோனிசாமி, வேல்சாமி, எஸ். வானமாமலை, எட்வர்ட் பொன்னுந்து ஆகியோர், கே. வி. கே. சாமியின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

நெல்லை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியனுக்குத் தொழிற் சங்கச் செயலாளர் ஞா செல்லப்பா மோதிரம் பரிசளித்தார்.

நிஜாம் மாளிகைகட்குச் சொத்து வரி

வசூலிக்குமாறு மாநகராட்சி ஆணையர் உத்தரவு

ஐதராபாத், நவ 9—

ஐதராபாத் நகராட்சி எல்லைக்குள் உள்ள நிஜாமின் 17 மாளிகைகளுக்கும் கடந்த ஏப்ரலிலிருந்து சொத்து வரி வசூலிக்குமாறு மாநகராட்சி ஆணையர் உத்தரவிட்டிருக்கிறார்.

இம்மாளிகைகளின் மூலம் ஆண்டு வருமானம் ரூ. 14 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையின்மீது 17-லிருந்து 24 சதவிகிதம்வரை வரி வசூலிக்கப்படும்.

"இப்பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கும் — நிஜாமுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருவதால் வரி விதிப்பை நிறுத்தி வைக்க வேண்டும்" என்று நிஜாமின் வழக்கறிஞர்கள் விடுத்த கோரிக்கையை ஆணையர் நிராகரித்துவிட்டார்.

பம்பாய் விமான நிலையத்தில் அறிஞர் அண்ணா

மராட்டியம்வாழ் தமிழ்ப் பெருமக்கள் வரவேற்று மகிழ்ந்தனர்

பம்பாய், நவ. 7—

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், உடல் நலம்பெற்று அமெரிக்காவிலிருந்து தாயகம் வரும் வழியில் 6-11-68 காலை 5-20 மணிக்கு அண்ணியார், இரா. செழியன், க. இராசாரர்ம், டாக்டர் சதாசிவம், பரிமளம் ஆகியவர்களுடன் பம்பாய் வந்து சேர்ந்தார்கள்; அவர்களை வரவேற்று மகிழும் வாய்ப்பு பம்பாய்வாழ் சழகத் தோழர்களுக்கும், தென்னவர்களுக்கும் கிடைத்தது.

5—11—68 இரவு 8-மணிமுதலே விமான நிலையத்தை நோக்கி மக்கள் வந்தவண்ணம் இருந்தார்கள்; விடியற்காலை 4-மணிக்கெல்லாம் விமான நிலையம் முழுதும் மக்கள் நிரப்பி வழிந்தனர்.

அனைவரும் தங்கள் கைகளில் மலர் மாலையும், கைத்தறி ஆடையும், பூச்செண்டும் ஏந்தி காத்து நின்றனர்.

அவர்கள் அனைவரும் அண்ணா அவர்களைக் கண்டு தங்களின் மகிழ்வைத் தெரிவிக்கும் வகையில் சழக முன்னணித் தோழர்கள் முறையாக அனைவரையும் ஒழுங்குபடுத்தி நிற்கச் செய்தனர்.

சரியாக 5-20 மணிக்கு விமானம் வந்து சேர்ந்தது; அதுபோது, தமிழகச் சட்டமன்ற முன்னாள் அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர், பம்பாய் தி. மு. க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன், துணைச்செயலாளர் சிதம்பரம், பொருளாளர் சங்காரன், 'கல்கி' சதாசிவம், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி, சுந்தரவடிவேலு, முல்லைக்கொம்பை வடிவேலு, மராட்டிய மாநில அரசின் அலுவலர்கள், மற்றும் பம்பாய் தி. மு. க.-வின் முன்னணித் தோழர்களான மா. இராசகோபால், அரங்கண்ணல், அன்புமணி, தாமசு, பொற்கோ, தியாகராசன், சுபகுமார், பெருமாள், சீவரத்தினம், இராமையா, சின்னப்பா, கலைச்செல்வன், செரிமேரி, முத்தையா, கருப்பையா, சாமிதாசு, வள்ளிநாயகம், அப்துல் ரசாக், டஷீர், இரத்தினசாமி, மற்றும் துணை மன்றத் தோழர்கள், திருவள்ளுவர் கலா மன்றம்—தமிழ்ச் சங்கம்—இராசேசுவரி நாட்டிய கலா மன்றத்தின் தோழர்களும், மற்றும் பலரும் கைத்தறி ஆடையும், மலர் மாலையும் அணிவித்து மகிழ்ந்தார்கள்.

காலை 6-30 மணிக்கு அறிஞர் அண்ணா அவர்கள், தமக்கே உரித்தான புன்னகையோடு விடைபெற்றுச் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

சிசர்ஸ் போட்டியில் சேருங்கள்—

"முகச்சாயலை பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்"

பெறுவீர்

ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

நீங்கள் பார்க்கும் 10 முகச்சாயல்களும் பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. "இதை விடை அனுப்பும் பாரமாக உபயோகிக்கவும்" என்று குறிப்பிடப்பட்டுள்ள கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 1 என்று குறிப்பிடப்பட்டுள்ள முகச்சாயலைக் கொண்ட நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் 1 'விமி'யினுடையது என்று நீங்கள் நினைத்தால் கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 'விமி' என்று எழுதுங்கள்.) இவ்விதமாகவே 1 முதல் 10 வரை எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் பூர்த்தி செய்து, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் சிகரெட் பாக்கெட்டுகளையும் சேர்த்து முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்ட விடை பாரத்தை கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதாவதொன்றுக்கு அனுப்புங்கள். 40 திரைப்பட நட்சத்திரங்களின் பெயர் பட்டியலை நாங்கள் கொடுத்துள்ளோம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள முகச்சாயல்கள் இந்தப் பட்டியலிலுள்ள 10 திரைப்பட நட்சத்திரங்களினுடையவை.

திரைப்பட நட்சத்திரங்களின் பெயர்கள்:

சுஜித் குமார், தேவ் ஆனந்த், அச்லா சச்தேவ், ஆகா, சஞ்ஜய், ஆஷா பரேக், நிருபராய், மீனு குமாரி, சஷிகலா, ஷார்மிளா டாகுர், மதுமதி, பிரேம் சோப்ரா, அஸ்ரா, பர்யால், சாயிதா கான், பிஸ்வஜித், ஜெய்சங்கர், ஹர்நாத், பி.காஞ்சனு, வஹிதா ரஹ்மான், மாலா சின்ஹா, அஞ்சு மகேந்திரு, சஷிகபூர், சைரா பானு, பிரோஸ் கான், இந்திராணி முக்கர்ஜி, சிமி, காமினி கௌசல், விமி, நாஜ், பபிதா, மும்தாஜ், ஸோனியா சாஹ்னி, யஜப் ரஹ்மான், பிரான், எம். ராஜஸ்ரீ, கே. விஜய நிர்மலா, கிருஷ்ணு, ஏ.வி.எம் ராஜன், வாணிஸ்ரீ.

முக்கிய விதிகள்: இப்போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்கு தகுதியுடையவராகார். சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும். இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்பும் பாரங்களில் முழு விதி, நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.



முடிவு தேதி நவம்பர் 15, 1968 வரை நீடிக்கப் பட்டு உள்ளது.

சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப் படுகிறது.

இங்கே கத்தரிக்கவும்

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

1.	6.
2.	7.
3.	8.
4.	9.
5.	10.

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப் பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ....
முகவரி ....
....
....
வயது .... தொழில் ....

பிப்ரவரியில் புதுவை சட்டமன்றத் தேர்தல்

தேர்தல் ஆணையர் யோசனை

சனவரி 8-ம் நாள் நாகர்கோயில் நாடாளுமன்ற இடைத் தேர்தல்

புதுடில்லி, நவ. 9—

மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழுள்ள புதுவை மாநிலத்தில் இடைக் காலத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடக்கக்கூடும்.

தமிழகத்தில் நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் சனவரி 8-ம் நாள் நடைபெறும்.

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மேற்கு வங்கம், பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன; இந்த மாநிலங்களுடன் சேர்த்து புதுவை மாநிலத்திலும் பிப்ரவரித் திங்களில் தேர்தல்களை நடத்தலாம் என்று யோசனை தெரிவித்து புதுச்சேரி அதிகாரிகளுக்குத் தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

பதில் கிடைத்ததும் வாக்குப் பதிவுக்கு நாளை நிர்ணயிக்க சென் வர்மா புதுச்சேரி செல்வார்.

புதுவை சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறியதால் அங்கு அரசியல் சட்ட அமைப்பு செயல்படுவது முறிந்துவிட்டதாகக் கூறி ஆளுநரிடமிருந்து வந்த அறிக்கையின்மீது 30 உறுப்பினர்களைக் கொண்ட புதுவை சட்டமன்றம், செப்டம்பர் மாதம் கலைக்கப்பட்டது தெரிந்ததே.

நாகர்கோயில் இடைத் தேர்தல்

தமிழ்நாட்டில் நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் சனவரி 8-ம் நாள் நடக்கும்.

வாக்குப் பதிவு நாளன்று அந்தத் தொகுதியில் தாம் இருக்க வேண்டும் என்று தென்னாட்டில் உள்ள சில அரசியல்வாதிகள் தம்மைக் கேட்டுக் கொண்டிருப்பதாக சென் வர்மா கூறினார்.

கி. மனோகரன்

உடல்நிலை

சென்னை, நவ. 9—

உடல் நலம் குன்றி கடந்த இரண்டு வார காலமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத் தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன், முழு நலம் எய்திவிட்டார். இன்னும் ஒரு வாரம் மருத்துவமனையில் தங்கிய பின் வீடு திரும்புவார்.

ரூபாய் நோட்டில் காந்தி உருவம்

இந்திய அரசு முடிவு

புதுடில்லி, நவ. 9—

காந்தியாரின் பிறந்த நூறுவது ஆண்டான அடுத்த ஆண்டில், காந்தியார் உருவப் படம் பொறித்த சில ரூபாய் நோட்டுகள் வெளியிடப்படும்.

இது சம்பந்தமாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்த யோசனைக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

காந்தியின் உருவப் படம் கொண்ட ஒரு ரூபாய்—பத்து ரூபாய்—நூறு ரூபாய் நோட்டுகளை வெளியிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த ரூபாய் நோட்டுகளுக்கு மூன்றுவித வடிவ அமைப்புகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தாளடிக்குப் போதிய தண்ணீர்

அதிகாரி தகவல்

திருச்சி, நவ. 8—

"தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழையினால் குறுவை அறுவடை எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை; அறுவடையைப் பாதிக்கும் அளவுக்குக் கடுமையான மழை பெய்யவில்லை"

என்று, வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் இன்று கூறினார்.

மாவட்டத்திலுள்ள நீர்த் தேக்கங்களிலெல்லாம் போதிய அளவு தண்ணீர் இருப்பதாகவும், தாளடிப் பயிருக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

'சட்டமன்ற உறுப்பினர் மரணம் தற்கொலையே'

போலீசுத்துறை கருத்து

சென்னை, நவ. 8—

"சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் இறந்துகிடந்த ச.சோ. கட்சி எம்.எல் ஏ. எஸ். பாலசுப்பிரமணியத்தின் மரணம் குறித்துப் புலன் விசாரணை நடத்திய போலீசார், 'அவரது மணம் தற்கொலைதான்' என முடிவு செய்தார்கள்" என்று நகர போலீசுக் கமிஷனர் தெரிவித்தார்.

சென்னைக்கு வெளியே உள்ள ஒரு நண்பருக்கு பாலசுப்பிரமணியம் (இறப்பதற்கு முன்) கடைசியாக எழுதிய கடிதம் போலீசாருக்குக் கிடைத்துள்ளது.

"தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்து விட்டதாகவும் இதுவே கடைசி கடிதம் என்றும் பாலசுப்பிரமணியம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்" என்று கமிஷனர் தெரிவித்தார்.

"ஆனால், எப்படி தற்கொலை செய்துகொள்ளப்போகிறார் என்பது பற்றியோ, தற்கொலைக்கான காரணங்கள் பற்றியோ கடிதத்தில் அவர் ஏதும் குறிப்பிடப்படவில்லை" என்றார் கமிஷனர்.

சென்னையில் அண்ணா

புதிய இல்லத்தைப் பார்வையிட்டார்

சென்னை, நவ. 8—

காஞ்சிபுரத்தில் தம் அன்னையாருடன் ஒருநாள் தங்கிய பின் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று சென்னை திரும்பினார்.

நுங்கம்பாக்கம் இல்லத்தில் அமைச்சரவையினருடன் ஆலோசனை நடத்தினார்.

அண்ணா அவர்கள் கிரீன்வேஸ் சாலையில் உள்ள புதிய இல்லத்தை (அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் இருந்த இல்லம்) இன்று சுற்றிப் பார்த்தார்; உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்ட அமைச்சர் மாதவன், உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, முதலமைச்சரின் நேர்முகச் செயலாளர் சொக்கலிங்கம் ஆகியோர் அண்ணா அவர்களுடன் வந்திருந்தனர்.

இந்த வீட்டில் மற்றொரு அறை அமைக்க வேண்டியுள்ளது; வேறு சில வசதிகளும் செய்யப்படும்; இந்த வசதிகளை, அண்ணா அவர்கள் இந்த இல்லத்திற்கு வந்த பிறகும்கூடச் செய்துகொள்ளலாம்.

அண்ணா அவர்கள் இந்த இல்லத்திற்கு நவ. 11-ம் நாள் குடிபுகுவார்.

அமெரிக்கத் தலைநகரில் அன்பழகன்

வாஷிங்டன், நவ. 9—

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் இங்கு வந்துள்ளார்.

மாநிலங்களவைத் துணைத் தலைவர் திருமதி ஆல்வா தலைமையில் வந்துள்ள இந்தியக் குழுவில் அவர் உள்ளார்.

பகாமா தீவில் நாசாவ் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பின்பு, அமெரிக்காவில் தற்போது இந்தக் குழுவினர் சுற்றுப்பயணம் செய்துவருகின்றனர்.

இவர்கள் அமெரிக்க அரசின் வெளி உறவுத்துறை அலுவலகத்துக்கும் செல்வர்; அங்கு தெற்கு ஆசியப் பிரிவு உதவித் துணைச் செயலாளர் வில்லியம் ஜே. ஹாண்ட்லியுடன் உரையாடுவர்.

சென்னையில் புதிய திரையரங்கு

இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்

சென்னை, நவ. 9—

சென்னை - இராயப்பேட்டையில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் 'பைலட்' என்னும் திரைப்பட அரங்கை, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 11—11—68 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குத் திறந்துவைக்கிறார்; இவ்விழாவுக்கு சென்னை ஆர்ச் பிஷப் டாக்டர் ஆர். அருளப்பா தலைமை வகிக்கிறார்.

புதுவை மாநில நகராட்சித் தேர்தல்

நகர நலக் கூட்டணி

புதுவை மாநிலத்தில் நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தல்களில் போட்டியிடவும் தேர்தலை நடத்திவைக்கவும் அமைக்கப்பட்டுள்ள நகர நலக் கூட்டணியின் நிர்வாகிகள் ;—

தலைவர் : இ. குபேர்.

துணைத் தலைவர்கள் : எஸ். பெருமாள் பி.ஏ.பி.எல், வி. சுப்பையா.

செயலாளர்கள் : எம். ஏ. சண்முகம், எம். ஒ. எச். பரூக், என். குருசாமி.

உறுப்பினர்கள் : எஸ். இராமசாமி, பி எஸ்சி.பி.எல்., டாக்டர் அரங்கநாதன், ஆர். தங்கவேலு, என். ஜி. இராசன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழக அரசு வழங்கும் மற்றொரு சலுகை

தொழில் நடத்த வட்டியில்லாத கடன்

சாத்தான்குளம், நவ. 9—

தொழில் நடத்த தாழ்த்தப்பட்ட இந்து வகுப்பினருக்கு வட்டியில்லாத கடன் தொகை வழங்கத் தமிழக அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் முதல் ஐயாயிரம் ரூபாய் வரையில் கடன் தொகை வழங்கப்படும்.

இந்தக் கடன் தொகை நூறு தவணைகளில் வசூலிக்கப்படும்; 'இப்பணத்தைக் கொண்டு தையல் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை வைக்கவேண்டும்' என்று அந்த உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

எனவே, பயனுள்ள தொழில்கள் தொடங்கத் தாழ்த்தப்பட்ட இந்து வகுப்பினர், சென்னை தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநருக்கு உடனே விண்ணப்பிக்கலாம்.

சட்டத் துறை அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

நவ. 11 காலை 10-30 மணிமுதல் மாலை 4-மணிவரை : தேனி—நில அடமானப் பாங்கி கருத்தரங்கு; இரவு : சிங்கம்புனரி.

நவ. 12 காலை 10-மணி : எஸ்.வி. மங்கலம்—கிராம நலத் திட்டத்தின்கீழ் உயர்மட்ட தொட்டித் திறப்புவிழா; 11-மணி : திருப்பத்தூர்—நில அடமானப் பாங்கிக் கடன் தொகை அளித்தல்; மாலை 4-மணி : சிவகெங்கை–தாய்-சேய் நல விடுதித் திறப்பு விழா; 4-30 மணி : நில அடமானப் பாங்கியிலிருந்து கடன் தொகை அளித்தல்; 6-மணி : சிவகெங்கை.

நவ. 13 காலை 10-மணி : பரமக்குடி—நில அடமானப் பாங்கிக் கடன் அளித்தல்; 11-45 மணி : நெமினி–ஊராட்சிமன்றக் கட்டிடத் திறப்பு விழா; தானே இயங்கும் குடிநீர்த் தொட்டி அடிக்கல் நாட்டல்; பிற்பகல் 12-30 மணி : பரமக்குடி—ஆசிரியர்கள் கூட்டம்; 1-மணி : பரமக்குடி–ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 3-30 மணி : சம்பாகுளம்—பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; 4-மணி : முதுகுளத்தூர்—நில அடமானப் பாங்கியிலிருந்து கடன் தொகை அளித்தல்; பட்டா வழங்கல்; 5-30 மணி : ஏ. தாரக்குடி (கமுதி ஊராட்சி ஒன்றிப்பு)—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 6-15 மணி : காடனேரி—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா.

நவ. 14 காலை 8-மணி : கண்ணமங்கலம்—உரக் கிடங்குத் திறப்பு விழா; 9-30 மணி : புழுதிப்பட்டி–பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 10-30 மணி : கரசால்பட்டி–தானே இயங்கும் குடிநீர்த் தொட்டித் திறப்பு விழா; 11-மணி : புதூர்—கால்நடை மருத்துவமனைக் கட்டிடத் திறப்பு விழா; பிற்பகல் 12-30 மணி : ஆரணிப்பட்டி—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; மாலை 4-மணி : மணப்பாறை—நில அடமானப் பாங்கியிலிருந்து கடன் தொகை அளித்தல்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10—11—68

காஞ்சிபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கங்கைகொண்டான் மண்டபம் அருகில்; தலைவர் : வி. என். மார்க்; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., கே. டி. எஸ். மணி, வெ. சம்பந்தம், சரசுவதி வெங்கடேசன் எம்.சி.

சேந்தமங்கலம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெருமாள் கோவில் திடலில்; தலைவர் : மு. மாரிமுத்து; பேசுவோர் : நன்னிலம் அ. நடராசன், நகரச் செயலாளர் நடராசன், இராசலிங்கம், கே. பி. வாங்கிலி, பூ. அழகப்பன், சரவணன், துரைசாமி, அ. மருதன், இரா. வரதராசன்.

தமிழகத் திட்ட நகல்

முதலமைச்சர் அண்ணா ஒப்புதல்

சென்னை, நவ. 9—

"தமிழ்நாட்டின் நான்காவது ஐந்தாண்டு நகல் திட்டத்துக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் இறுதி வடிவம் கொடுத்து விட்டார்"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் கூறினார்; 'நான்காவது திட்ட முதலீட்டுத் தொகை ரூ. 624 கோடியாகும்' எனவும் அவர் தெரிவித்துவிட்டு, மேலும் குறிப்பிட்டதாவது :—

"நான்காம் திட்ட இறுதி வடிவத்தை விரைவில் திட்டக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

நான்காவது திட்டம் குறித்து அதிகாரிகள் மட்டத்தில் நவ. 20-ம் நாள் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்; அதைத் தொடர்ந்து டிசம்பர் திங்களில் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

தமிழக அமைச்சரவை கடந்த திங்கட்கிழமை கூடி நான்காவது திட்ட முதலீட்டுத் தொகையான ரூ. 643 கோடியை ரூ. 624 கோடியாகக் குறைப்பதென முடிவு செய்தது.

நீர்ப்பாசனம் மின்சக்தி வளர்ச்சிக்கு நான்காவது திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது."

குழுக் கூட்டம்

தாராபுரம் நகர வாக்காளர் பட்டியலைச் சரி பார்க்கும் முறையில் 11—11—68 காலை 10-மணியளவில், தாராபுரம் பயணியர் விடுதியில் கோவை மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் முன்னிலையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில், நகர எல்லையில் உள்ள கழக மாவட்ட உறுப்பினர்கள் -- பொதுக்குழு உறுப்பினர்கள் -- செயற்குழு மற்றும் பொது உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு நகரச் செயலாளர் மு. பழனிச்சாமி கேட்டுக்கொள்கிறார்.

கோவை மு. இராமநாதன்

சுற்றுப்பயணம்

நவ. 10 : கூடலூர்; 11 : மதுரை நகர்; 12 : விருதுநகர்; 13 : சக்கம்பட்டி; 14 : பெரியகுளம்; 15 : தேனி; 16 : சின்னாளப்பட்டி; 17 : மதுரை நகர்; 18 : திருபுவனம்; 19 : சுந்தரபாண்டியம்; 20 : திருவில்லிபுத்தூர்; 21 : கடையநல்லூர்; 22 : மதுரை–மேலூர்; 23, 24 : நெல்லை நகரம்; 25 : நெல்லை–கல்லிடைக்குறிச்சி; 26, 27 : கோவை நகரம்; 28 : கல்லக்குடி–திருச்சி; 29, 30 : திருச்சி நகரம்.